International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 5, Issue 2, April - June 2018 ISSN 2394-6393 (Online)

# கேரளத்தில் நாக வழிபாடு

**முனைவர். வே. இரவி**
**உதவிப் பேராசிரியர், அரசு விக்டோரியா கல்லூரி, பாலக்காடு, கேரளா**
*kottayravi@gmail.com*

மனிதன் தன்வாழ்வில் தினந்தோறும் அனுபவிக்கும் பல பிரச்சனைகளுக்க்குத் தீர்வு காண வேண்டியும் வாழ்க்கை நிலையை உயர்த்திடவும் வேண்டி மேற்கொள்ளும் தேடலே நம்பிக்கையாகவும் வழிபாடாகவும் வேண்டு தலாகவும் மாறின. நாக வழிபாடு மிகவும் தொன்மையானது. முதலில் இயற்கை வழிபாட்டை அறிந்த மனிதன் பின்னர் ஆவி வழிபாட்டை மேற்கொண்டான். பின்னர் தனக்கு நல்வாழ்வு தரும் சக்திகளை மனிதன் பல்வேறு உருவங்களில் கண்டு அவற்றை வழிபட்டான்.

இதன் தொடர்ச்சியே புராணங்களாகவும் இதிகாசங்களாகவும் உருவாயின. இவற்றின் அடிப்படையிலேயே பாம்பு கோவில்கள் தோன்றின. நாகதோஷம் இருந்தால் குழந்தை பிறக்காது என்று நம்பினர். நல்லபாம்பு சிவனின் கழுத்தை அலங்கரிப்பதாகக் கருதி மக்கள் வணங்கினர். முதலில் பயம் காரணமாக நாகங்களை வழிபட்டவர்கள் பின்னர் அது ஏதோ ஒரு தெய்வ சக்திக்குக் கட்டுப்பாடு நடப்பதாகவும், விதி முடிந்தவரை மட்டுமே அது கடிப்பதாகவும், நம்பினார்கள். நாளடைவில் அனைத்து விலங்கு வழிபாட்டு முறைகளிலும் பாம்பு வழிபாட்டிற் கெனத் தனி முக்கியத்துவம் ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை பாம்பு வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்றும் புற்றுக்குப் பால் வார்த்து வழிபடும் வழக்கம் உள்ளது.

பாம்பு வழிபாடு வேறு பல நாடுகளிலும் இருந்து வந்துள்ளது. பொனீசியா, மெஸப டோமியா, கிரேக்கம், இத்தாலி, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, எகிப்து, நேபாளம் ஆகிய நாடுகளிலும் பாம்பு வழிபாடு இருந்துவருகிறது.

இந்தியாவைப் பொருத்தவரை இமயம் முதல் குமரி வரை பாம்பு வழிபாடு இருந்துவருகிறது. குறிப்பாகத் தென் இந்தியாவில் பாம்பு வழிபாடு அம்மன் வழிபாட்டுடன் இணைத்தே நடைபெறுகிறது. தமிழ்நாட்டிலும் பாம்பு வழிபாடு புகழ்பெற்றது. பாம்பின் பெயர்கள் கொண்ட இறைவனது பெயர்கள் பல உள்ளன. நாக ஆபரண விநாயகர், சர்ப்பபுரி ஈசுவரர், நாகநாதர், நாகேசுவரர், புற்றீசர், வன்மீக நாதர் போன்ற பெயர்கள் இறைவனுக்கு வழங்கப்படுகின்றன. அதேபோல் நாகத்தின் பெயர் கொண்ட தலங்கள் பல உள்ளன. ஆலவாய் நாகபட்டிணம், நாகர்கோவில், நாகமலை, கோடநல்லூர், திருவனந்தபுரம், திருப்பாம்புரம், பாம்பணி, காளத்தி போன்ற பெயர்கள் பாம்பின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டவை. பாம்பின் பெயர்களோடு பொருந்தி இருக்குமாறு பெயர்வைக்கும் பழக்கம் தமிழ் மக்களிடம் உள்ளது. நாகராஜன், நாகநாதன், நாகலட்சுமி, நாகம்மை, நாகலிங்கம், நாகப்பன், நாகமணி, நாகரத்தினம், நாகபூஷணம், நாகார்ஜுனன், நாகநந்தினி, நாககுமாரி, போன்ற பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. கருவுற்ற பெண் நாகம் ஒன்றைப் பார்த்துவிட்டால் அவள் பெற்றெடுத்த குழந்தைக்கு நாகத்தின் பெயரோடு பொருந்தி வருமாறு பெயர் வைப்பது நாட்டுப்புறவழக்கமாகும்.

இந்திய நிலப்பரப்பில் தனித்துவமான பழமையான அனைத்து வழிபாட்டு மரபுகளையும் உள்ளடக்கி உள்ளதுடன் நவீன சமய வழிபாட்டு மரபுகளும் கேரளத்தில் உண்டு. பழந்தமிழ்ப் பண்பாட்டு மரபுகளின் தொல்லெச்சங்கள் இன்றும் கேரளப் பண்பாட்டு வெளிகளில் நிலைபெற்று இருந்து வருவதை அறிஞர்கள் எடுத்துக்காட்டுவர். கேரளத்தில் நிகழ்த்தப்பெறும் நிகழ்த்துக்கலைகளில் பலவும் வாய்மொழி மரபு, சடங்கு மரபு, நிகழ்த்து மரபு என்னும் மரபுசார் நிலைகளில் இன்றும் சிறப்பாக நிகழ்த்தப் பெற்றுவருகின்றன.

“கடவுளின் சொந்த நாடு” என்றழைக்கப்படும் கேரளாவில் பெருந்தெய்வ வழிபாட்டைப்போலவே சிறுதெய்வ வழிபாடும் சிறப்புற வழிபடப்படுகின்றது. சிறுதெய்வ வழிபாடுகள் இயற்கையாக அமைந்த வழிபாட்டுத்தலங்களாக அமைந்திருந்தன. அவை பெரும்பாலும் ”காவுகள்” என்ற பெயரில் அமைந்திருந்தன. காட்டில் உருவாக்கப் பட்டவையே ‘காவுகள்’. கேரளத்தில் இன்றும் ‘காவுகள்’ உள்ளன. பாலக்காட்டில், பல கோயில்களும் காவுகளின் பெயரால் அறியப் படுகின்றன. வலியம்மக்காவு, மாங்கோட்டுக்காவு. மாங்காவு, புளியங்காவு, ஐயப்பன்காவு, போக்காச்சிக்காவு, முண்டியங்காவு, மந்நத்துகாவு, மலமக்காவு, சாமுண்டிக்காவு, குரின்னிக்காவு, முலையம்பரம்பாட்டுக்காவு, மக்காவு, ஏற்றப் பாட்டுக்காவு, விலங்கோட்டுக்காவு, முட்டாசியார் காவு, அண்டிமகாகாலன்காவு,செங்கனிக் கோட்டுக்காவு, வக்காலக்காவு, கூற்றிக்காவு,

பாலேக்காவு, மூகாம்பிகக்காவு, செறுமுலையன் காவு, குருமாளிக்காவு, யக்கிக்காவு, பழையகாவு, கொற்றக்காட்டுக்காவு, கைமோத்காவு, மணப் புள்ளிக்காவு, பனங்காவு, செங்கனியூர்காவு, காளிகாவு, பரக்கோட்டுக்காவு, வெளுத்தங்காவு, பாம்புங்காவு, முத்தப்பங்காவு, கைப்பேக்காவு, உத்ராளிக்காவு, கண்டாத்தார்க்காவு, செம்பூக்காவு, பாரமேக்காவு, சக்குளத்தங்காவு, பல்லசேனக்காவு, பூத்திரிக்காவு, சீர்மக்காவு, ஆரியங்காவு, இரப்பக்காட்டுக்காவு, முண்டக்காவு, கக்கோட்டுக் காவு, கண்ணுக் கோட்டுக்காவு, சர்ப்பக்காவு, போன்றவாறு பலகோயில்கள் இன்றும் காவுகள் என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகின்றன.

கேரளத்தில் பகவதிவழிபாடு, மிருக வழிபாடு, நாக வழிபாடு, இலிங்க வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு போன்றவை முக்கிய மானவை இப்படிப்பட்ட வழிபாடு உருவாகக் காரணம் மக்கள் அவற்றின் மீது கொண்ட பயமேயாகும். தனக்கு பயத்தைத் தரக்கூடிய வற்றைத் தெய்வங்களாக்கி அவற்றிற்கு உருவ அமைப்பைக் கொடுத்து வழிபடத் தொடங்கினர். பயம் கலந்த பக்தியே நாகவழிபாடு தோன்றக் காரணமானது.

கேரளம்'என்ற பெயர் உருவானதற்குப் பல காரணங்களைக் கூறுவர். சேரளம் என்ற சொல்லிலிருந்து தான் கேரளம் உருவானதென்ற கருத்தும் உண்டு. சேரளம்' என்ற சொல் நாகங்கள் வசிக்கும் இடம் என்றும் பொருள்படும். "பரசுராமன், மழுவெறிந்து கேரளத்தை உருவாக்கிய கதையை நாக வழிபாட்டோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். பரசுராமன் தன் தாயைக் கொன்ற பாவம் தீர்க்க எண்ணிய போது பிராமணர்களுக்கு நிலத்தை தானம் செய்தால் பாவம் தீருமென்று தேவர்கள் கூற மழுவை எறிந்து கேரளத்தை உருவாக்கியதாக தொன்மக்கதை கூறப்படுகின்றது. அந்நாளில் கேரளம் காடாகவும் மனிதர்கள் வாழ முடியாத நிலமாக இருந்தது. அதனால், பிராமணர்கள் இங்கிருந்து வெளியேற எண்ணிய போது பரசுராமன் அவர்களைத் தடுத்து சிவபெருமானிடம் சென்று அருள் வேண்டினார். நாகங்களைப் பூசை செய்தால் துன்பம் விலகுமென்று சிவபெருமான் அருள்புரிந்தார். பரசுராமன் நாக வழிபாட்டைத் தொடங்கி வைத்ததாக நம்பிக்கை. இதன் நிகழ்க்கலை வடிவத்திற்கு நாகப்பாட்டு அல்லது சர்ப்பப்பாட்டு என்றழைப்பர். இது கேரளத்தின் பாரம்பரியக் கலை வடிவம் ஆகும். நாகங்கள் சத்தியத்திற்குத் துணைபுரியும் என்றும் தன்னை நம்புகின்றவர்களைக் கைவிடாமல் துணை நிற்குமென்றும் நம்புகின்றனர். மலைகளிலும், காடுகளிலும் வழிபட்டு வந்த நாகவழிபாடு இன்று பெரும்பாலான வீடுகளில் குடி வைத்துள்ள குல தெய்வக்கோயில்களிலும் நாக வழிபாடு நடத்தப்பட்டு வருகின்றது. கேரளாவில் பல முறைகளில் நாகவழிபாடு நடைபெறுகிறன்றது. வீட்டிலுள்ள பூசையறை, வீட்டுவாசல், வீட்டின் பின்புறம், கோயில்கள் போன்ற இடங்களில் நாகாராதனை நடைபெறுகின்றது. இவ்வாலயங்களில் செய்யப்படும் வழிபாடுகள் பலவிதத்திலாகும். ஆயில்யபூசை, சர்ப்பப் பிரதிஷ்டம், அஷ்டநாகபூசை, சர்ப்பசமஸ்காரம், நூறும்பால், பால்பாயசஹோமம், சர்ப்பபலி, சர்ப்பபாட்டு, நாகத்தெய்யம், புள்ளுவப்பாட்டு, நாகத்தோற்றம், குருந்தினிப்பாட்டு, நாகபஞ்சமி, திரியுழிச்சல், கம்பளம்போன்றவையாகும். நாக வழிபாட்டிற் குறியதாகக் கொள்ளப்படும் நாகங்களின் வகைகள் எட்டாகும். அனந்தன், வாசுகி, தக்ஷன், சங்கன், கார்கோடன், குளிகன், பத்மன், மஹாபத்மன் என்பன. நாகம், சர்ப்பம் என்ற இரு சொற்களும் ஒரே பொருளைத்தருவதாக இருப்பினும் தாந்த்ரீகப் பூசை மற்றும் சடங்குகளில் இரண்டும் வெவ்வேறாகக் கருதப்படுகின்றது. மனுஸ்மிருதி நாகம், சர்ப்பம் இரண்டையும் வேறுவேறாகக் குறிப்பிடுகின்றது. அமரகோசம்' என்னும் நூல் இரண்டும் ஒன்றெனக் குறிப்பிடுகின்றது.

நாக வழிபாட்டிற்கான, நாகச்சிலைகள் குறித்தான விளக்கங்கள், "சில்பரத்னம்" என்னும் மலையாள நூலில் கூறப்பட்டுள்ளன. ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு என்ற ஒற்றைப்படை அடிப்படையில் பாம்பின் தலை உருவங்களும், மனித தலை உருவமும் உடல் நாக வடிவமுமான சிலையும் உண்டாக்குவர். இரண்டு மற்றும் இரண்டிற்கு மேற்பட்ட நாகச்சிலைகள் கோயில்களில் குடியமர்த்துவர். மேலும், சிவலிங்கமும் ஐந்து தலை உருவமும், வால் கண்ணாடியும் போன்ற நாகச்சிலைகள் வழக்கத்திலுள்ளன. சிலைகளில் சைவ வைணவ வேறுபாடு காணமுடிகின்றது.

நாகச் சிலைகள் பெரும்பாலும் கற்களால் உருவாக்கப்பட்டிருக்கும். வெறும் கல்லை நாகக் கடவுளாக எண்ணி வழிபடுவோரும் உண்டு. சிலைகள், சிற்ப வேலைப்பாடமைந்த சிலைகள், சித்ரகூடங்கள் என்ற வடிவங்களில் நாக வழிபாடு நடக்கின்றது. ஒரு அடி சதுரமுள்ளதாகவும் மேலே கூர்மையான

வடிவமுடையதாகவும் ஒரு கூடாரம் போன்ற அமைப்புடையதான கல்லால் உருவாக்கப்பட்ட புற்று வடிவமாகும்.

கேரளத்தில், பல வீடுகளுக்கும் பொதுவான குலதெய்வக் கோயில் உள்ளது. இக்கோயிலை “அடிமைக் காவு” என்றழைப்பர். கண்டா கர்ணன், மகாவிஷ்ணு, உலோகபரமேஸ்வரி, நீல வட்டாரி, நாகங்கள், ஐயப்ப சாமி, இரக்கர முத்தன், முனீஸ்வரன், போன்ற தெய்வங்கள் பெரும்பாலான வீடுகளில் குலதெய்வங்களாக உள்ளன. நாகங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவை பெரும்பாலான காவுகளிலும் இருக்கும்.

நாகங்களை ‘வெளுத்தன்மார்’ என்றும், நாகங்கள் உள்ள காவினை ‘வெளுத்தன் காவு’ என்றும் அழைப்பர். நாகங்களில் கரி நாகம், மணி நாகம், அஞ்சர மணி நாகம், கோதண்ட மணி நாகம், நாக யட்சி என்பன முக்கியமானவையாகும். நாக வட்டாரி, உலோக பரமேஸ்வரி என்பன பகவதியின் வடிவமாகும். ஐயப்பன் என்னும் தெய்வம் சபரிமலை ஐயப்பன் அல்ல. கண்டா கர்ணன் என்னும் தெய்வம் மூன்று பெயர்களில் வழிபடுகின்றார்கள். கண்ட முத்தன், கண்டாகர்ணன், வெளுத்த கண்டாகர்ணன் என்பனவாகும்.

நாக வழிபாட்டோடு இரண்டறக்கலந்த ஒரு சடங்குசார் கலையே புள்ளுவன் பாட்டு. புள்ளுவர் பாடக்கூடிய பாடலாதலால் புள்ளுவன் பாட்டு என்றழைக்கப்படுகிறது. கேரளத்தில் வாழும் புள்ளுவர் இன மக்களை நாகம்பாடிகள், பிரேதம்பாடிகள் என்று இரண்டு வகைப் படுத்துவர். நாகங்களைப் பாடுபவர்கள், நாகம்பாடிகள் என்றும், பிரேதங்களைக் குறித்துப் பாடுபவர்கள் பிரேதம்பாடிகள் என்றும் அழைப்பர்.

புள்ளுவர்கள் நாகவழிபாட்டோடு தொடர்புடைய முக்கியமான இரண்டு சடங்குகளை நிகழ்த்துகின்றனர். அவையே, கொட்டு விளி மற்றும் களம் பாட்டு ஆகும். களம் பாட்டு, குலதெய்வக் கோயில்களில் குடியமர்த்தியுள்ள தெய்வங்களை வரைந்து அத்தெய்வங்களைப் பக்தர்கள் மேல் அருள் வரச் செய்வதாகும். வெள்ளை, கருப்பு, பச்சை, சிவப்பு, மஞ்சள் என்னும் ஐவகைப் நிறப் பொடிகளால் களம் வரையப்படுகின்றது. முதலில் நாகங்களின் களம் வரைந்து பின்னர் ஐயப்பன், கண்டா கர்ணன், உலோக பரமேஸ்வரி போன்ற தெய்வங்களைக் களமாக வரைவர்.

இவ்வாறு களம் வரைந்த பின்னர் கொட்டு விளி நிகழும். கொட்டு விளி’ நிகழ்த்திட நான்கு பேர் செல்வர். இச்சடங்கில் ஆண் பெண் என்ற பேதமின்றி அருள் வந்து சாமியாடுவர். கண்டாகர்ணன், ஐயப்ப சாமி, முனீஸ்வரன் போன்ற தெய்வங்கள் ஆண்களின் மேல் வரும். உலோக பரமேஸ்வரி, நீல வட்டாரி, நீலி போன்றவை பெண்கள் மேல் வரும். நாகங்கள் இருபாலரிடத்தும் வரும். கோயிலில் குடியமர்த்தியுள்ள தெய்வங்களைக் குடும்பத் திலுள்ள நபர்களின் மேல் வரவழைத்து அதன் வழி குலதெய்வத்தினை வணங்கும் பக்தர்களின் துன்பங்களைக் களைவதே புள்ளுவன் பாட்டின் பலனாகப் பக்தர்கள் எண்ணுகின்றனர். குலதெய்வக் கோயில்களில் குடியமர்த்தியுள்ள தெய்வங்களைப் பாடி அழைக்கும் இந்நிகழ்வினுக்குக் “கொட்டுவிளி” என்று வழங்குவர். குலதெய்வக் கோயிலில் குடிகொண்டிருக்கும் தெய்வங்களைப் பாடி வரவழைத்து, அக்கோயிலுக்குப் பல காரணங்களால் ஏற்பட்ட தோஷங்களை நீக்கி அக்கோயிலில் தெய்வங்களைக் குடியமர்த்தும் பணியே புள்ளுவன் பாட்டு எனப்படும். கொட்டுவிளி நடத்துகையில் அக்கோயிலுக்கு உரிமையுள்ள (அடிமைகள்) பக்தர்கள் அனைவரும் பங்கெடுப்பர். அந்நேரம் பக்தர்கள் மேல் அருள் வந்து அவர்கள் சாமியாடுவர். இதனை ’துள்ளுதல்’ என்றழைப்பர்.

புள்ளுவன் பாட்டில் பயன்படுத்தும் இசைக்கருவிகளாவன, வீணை, குடம் மற்றும் குழித்தாளம். இவை புள்ளுவர்களாலேயே உருவாக்கப்படுகின்றன. பிரம்மன் குடமாகவும், விஷ்ணு குழித்தாளமாகவும், சிவன் வீணையாகவும் இருப்பதாகப் பக்தர்களின் நம்பிக்கையாகும். எல்லா குலதெய்வக் கோயில்களிலும் களம் எழுதி கொட்டு

விளி நடத்துவதில்லை. அதிக பொருட்செலவாகுமென்பதால் சில வீடுகளில் கொட்டு விளி மட்டுமே நடத்துவர். களம் எழுதினால் கொட்டு விளி நடத்த வேண்டும். வசதி படைத்தவர்கள் களம் எழுதி கொட்டு விளி நடத்துவர். மற்றவர்கள் கொட்டு விளி மட்டுமே நடத்துவர்.

இவ்வாறாக கேரளத்தில் தொல் வழிபாட்டின் எச்சங்கள் இன்றும் வழிபாடாக நிகழ்ந்து வருகின்றன. பெருந்தெய்வ வழிபாட்டின் ஆதிக்கம் நிலவி வரும் இக்காலகட்டத்தில் சிறுதெய்வ வழிபாடும் நிகழ்ந்து வருகின்றன. கேரளத்தில் தற்போது ஏதாவது வீட்டில் பிரச்சனை ஏற்பட்டால் சோதிடரைக் காண்பர். அவர், வீட்டிலிருக்கும் குலதெய்வத்திற்குச் சரியான முறையில் பூசை செய்வதில்லை என்றும், பூசை செய்தால் தோஷம் நீங்கும் என்கிறார். உடனே அவர்கள் குலதெய்வக் கோயிலைத் தூய்மையாக்கி பூசை செய்கின்றனர். குடும்ப உறவுகளை ஒன்றிணைக்கும் சக்தியாக நாக வழிபாடு போன்ற குடும்ப தெய்வ வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

## பார்வை நூல்கள்:

[1] நாகாராதன கேரளத்தில் – முனைவர்.சி.எஸ். ஜெயகுமாரிகுஞ்சம்மா - கேரள பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்,கேரளா-முதற்பதிப்பு2012.

[2] ஃபோக்லோர் நிகண்டு – முனைவர்.எம்.வி.விஷ்ணு நம்பூதிரி கேரள பாஷா இன்ஸ்டியூட்,திருவனந்தபுரம்- மூன்றாம்பதிப்பு-2010.

[3] கேரளத்திலே நாடன் பாட்டுகள் – முனைவர் சசிதரன் க்ளாரி – ஓலிவ் பதிப்பகம்,நடக்காவு,கோழிக்கோடு- முதற் பதிப்பு -2010.

[4] ”பாலக்காடு-ஸ்தலம்-காலம்-சரித்திரம்”- ஜில்லா டூரிசம் ப்ரமோஷன் கவுன்சில்,பாலக்காடு- முதற் பதிப்பு-2011.

[5] நாடன் பாட்டுகள் மலையாளத்தில்- முனைவர். எம்.வி.விஷ்ணு நம்பூதிரி, கேரள பாஷா இன்ஸ்டியூட்,திருவனந்தபுரம்- மூன்றாம்பதிப்பு- 2008.